வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 01.09.2025 திங்கட்கிழமை | இதழ் : 244 | பக்கங்கள் : 08

MARUTHI MONEY EXCHANGE
மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு வெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

### 3 முக்கிய நிகழ்வுகளுக்காக

# ஜனாதிபதி அநுரகுமார இன்று யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 01

**ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார். இங்கு அவர் பல்வேறு அபிவிருத்தி பணிகளை தொடக்கி வைக்கவுள்ளார்.**

ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு வருட காலம் பூர்த்தியாவதை முன்னிட்டு தொடங்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் ஆரம்ப நிகழ்வுக்காகவே அவர் இன்றைய தினம் யாழ்ப்பாணம் வருகிறார்.

ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலின்படி, காலை 8.30 மணிக்கு மயிலிட்டியில் மீன்பிடி துறைமுக அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்துவைப்பார்.

தொடர்ந்து, காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் 07



## அரியாலை மனித புதைகுழியை பார்வையிடுவாரா ஜனாதிபதி?

யாழ்ப்பாணம், செப். 01

இன்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியை பார்வையிடுவாரா என்று எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

பல்வேறு அபிவிருத்தி பணி களை தொடக்கி வைப்பதற்காக ஜனாதிபதி அநுர குமார இன்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

முன்னதாக, "யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி அநுரகுமார அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியையும் பார்வையிடலாம்", என்று அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்திருந்தார். இந்த நிலையில், இது தொடர்பில் அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பாக பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி எஸ். நிரஞ்சனிடம் கேட்டபோது, "அவ்வாறான தகவல் எதுவும் இதுவரை (நேற்று வரை) நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்படவில்லை", என்று கூறினார்.

இந்த நிலையில், இன்றைய தினமும் அரியாலை மனிதப் புதைகுழியில் அகழ்வு பணிகள் தொடர்ந்து நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சர்வதேச விசாரணைக்கு ஒருபோதும் இடமில்லை!

அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, செப். 01

அரியாலை - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச விசாரணைக்கு அனுமதி அளிக்கப் போவதில்லை - இவ்வாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டின் தற்போதைய சூழலில் சர்வதேச விசாரணைகள் அநாவசியமான 07

## இலங்கையின் புதைகுழிகளுக்கு சுயாதீன விசாரணை அவசியம்!

ஐ. நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர்

கொழும்பு, செப். 01

இலங்கையில் அண்மையில் மனித புதைகுழிகளிலிருந்து மீட்கப்பட்ட சிறார் உள்ளிட்ட பலரின் மனித எலும்புக்கூடுகள் மற்றும் சான்றுப் பொருட்கள் என்பன கடந்த கால மனித உரிமைகள் மீறலின் அளவையும் - நம்பகமான - வெளிப்படையான மற்றும் சுயாதீன விசாரணைகளுக்கான அவசரத் தேவையையும் வலியுறுத்துகின்றன என்று இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அண்ட்ரே பிராஞ்ச் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில்,

ஆயிரக்கணக்கான இலங்கையர்களின் கதி என்னவென்று தெரியவில்லை. இது "மௌனம் 07

## கோட்டாபயவும் சி. ஐ. டி.இற்கு அழைக்கப்பட்டார்

கொழும்பு, செப். 01

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் வாக்குமூலம் அளிப்பதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

காலி முகத்திடலில் போராட்டக் காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை 07

## எரிபொருட்களின் விலைகள் குறைப்பு

கொழும்பு, செப். 01

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன. இதன்படி, பெற்றோல், ஒட்டோ டீசல் என்பன 6 ரூபாயால் குறைவடைந்துள்ளன.

விலைச்சூத்திரத்துக்கு அமைவாக மாதாந்த 07

## அரிதான இரத்தநிலவை 7ஆம் திகதி காணலாம்!

கொழும்பு, செப். 01

"இரத்த நிலவு" என்று அழைக்கப்படும் இந்த ஆண்டின் கடைசி முழு சந்திரகிரகணம் எதிர்வரும் 7ஆம் திகதி நிகழவுள்ளது. சிவப்பு நிறத்தில் சுமார் 82 நிமிடங்கள் நீடிக்கவுள்ள இந்த சந்திரகிரகணத்தை இலங்கையர்களும் காணமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இந்த சிவப்பு நிலா முழுமையாகத் தெரியும் என்று ஆர்தர் சி கிளார்க் நவீன தொழில்நுட்ப 07

### அரியாலை மனிதப் புதைகுழி:

## 12 மனித எலும்புக்கூடுகள் நேற்றும் கண்டறியப்பட்டன

- இ. ராஜ்குமார், த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், செப். 01

அரியாலை மனிதப் புதைகுழியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 12 எலும்புக்கூடுகள் புதிதாக கண்டறியப்பட்டன. அத்துடன், 10 எலும்புக்கூடுகள் குழியிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டன.

அரியாலை மனிதப் புதைகுழியில் இரண்டாவது கட்டத்தில் 3ஆவது பகுதியாக நேற்று ஞாயிற்றுக்கிழமையும் அகழ்வு பணிகள் நடந்தன. 39 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்ட இந்த அகழ்வு பணி நேற்று மதியம் வரை முன்னெடுக்கப்பட்டிருந்தது. 07

### மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தில்

## தமிழ்நாட்டு மீனவர்களின் படகுகள் உடைத்து அகற்றம்!



யாழ்ப்பாணம், செப். 01

மயிலிட்டி இறங்குதுறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசுடைமையாக்கப்பட்ட தமிழ்நாடு மீனவர்களின் படகுகள் உடைக்கப்பட்டு அங்கிருந்து அகற்றப்பட்டன என்று அறியவருகிறது.

மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தின் 07

## மாகாண சபை தேர்தலை நடத்தும் சூழ்நிலையை ஏற்படுத்துவோம்!

பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, செப். 01

மாகாண சபைகள் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் தேர்தலை அடுத்த வருடம் மார்ச்சில் நடத்துமாறு இந்திய வலியுறுத்தியுள்ளது எனக் கூறப்படுகின்றது. இது உண்மையா? தேர்தலை நடத்துவதற்கான அரசாங்கத்தின் வேலைத் 07

## நவம்பர் 7ஆம் திகதி வரவு - செலவு திட்டம்

கொழும்பு, செப். 01

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி நிதி அமைச்சரான ஜனாதிபதி அநுரகுமார பாராளுமன்றத்தில் முன்வைப்பார்.

அத்துடன், அவர் அன்றைய தினம் வரவு - செலவு திட்ட உரையையும் ஆற்றுவார். இதன் பின்னர், வரவு - செலவுத் திட்டம் தொடர்பான (2 ஆம் 07

உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிரின் 98ஆவது பிறந்தநாள் யாழில் கொண்டாடப்பட்டது!

யாழ்ப்பாணம், செப். 01

முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் அ. அமிர்தலிங்கத்தின் 98ஆவது பிறந்தநாள் நிகழ்வு யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட முன்னாள் அரச அதிபர் விஸ்வலிங்கம் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் நினைவு பேருரையை வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, சிறப்புரையை மறவன்புலவு சச்சிதானந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.



இந்த நிகழ்வில் முன்னாள் பா.உ. தர்மலிங்கம் சித்தார்த்தன், பேரின்பநாயகம், இராஜேந்திரன், கௌரிகாந்தன், தமிழர் விடுதலை கூட்டணியின் பொதுச் செயலாளர் வீ. ஆனந்தசங்கரி, எம். கே. சிவாஜிலிங்கம், கலாநிதி கா. விக்னேஸ்வரன், முன்னாள் யாழ். முதல்வர் செல்லன் கந்தையன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன், முன்னாள் பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், சட்டத்தரணி கனக. மனோகரன்(கனடா) உட்பட பலர் பங்கேற்றனர்.

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதன்போது, தென்னிந்திய திருச்சபை முன்னாள் ஆயர் கலாநிதி ஜெபநேசன் அவரின் சேவைக்காக கௌரவிக்கப்பட்டார். (ஐ)

## யாழ். இந்து மாணவரின் 'மாறும் நிழல்' திரைப்பட வெளியீடு இன்று




யாழ்ப்பாணம், செப். 01

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களின் பங்களிப்பில் முழுமையாக தயாரித்து - இயக்கப்பட்ட திரைப்படமான "மாறும் நிழல்" இன்று திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஐ)

## ரூ. 2.7 கோடி பெறுமதியான கஞ்சாவுடன் ஐவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 01

சுமார் 2.7 கோடி ரூபாய் பெறுமதியான 121 கிலோ கேரள கஞ்சாவுடன் 5 பேரை கைதுசெய்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் - வங்காலை, நெடுந்தீவு கடற்பரப்புகளில் கடந்த 27, 29 ஆம் திகதிகளில் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையிலேயே இவை கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 2 படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## போதைப்பொருட்களுடன் யுவதி உட்பட மூவர் கைது

யாழ்ப்பாணம், செப். 01

ஐஸ், ஹெரோயின் போதைப்பொருட்களுடன் பெண் உள்ளிட்ட மூவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர். பொலிஸாரின் சோதனையின்போது 9 கிராம் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருளை பொலிஸார் கைப்பற்றினர்.

கைதான மூவரும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். (ஐ)

## மண்டைதீவு மனிதப் புதைகுழி விடயத்தில் ஜனாதிபதி கரிசனை செலுத்த வேண்டும்!

### வேலணை பிரதேச சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், செப். 01

மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு அடிக்கல் நாட்டுவதற்காக வரும் ஜனாதிபதி அநுர குமார, மண்டைதீவு மனிதப்புதைகுழி தொடர்பிலும் கரிசனை செலுத்த வேண்டும் என்று வேலணை பிரதேச சபை உறுப்பினர் சு. பிரகலாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு அடிக்கல் நாட்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வருகிறார். அந்த இடத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் துரத்துக்குள்தான் மண்டைதீவு மனிதப் புதைகுழிகள் உள்ளன.

மண்டைதீவில் இரண்டு மனிதப் புதைகுழிகள் உள்ளன. அவை அகழப்படப்பட்டு நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்த மாதம் 20ஆம் திகதி வேலணை பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மண்டைதீவுக்கு வரும் ஜனாதிபதி அனுர குமார திஸநாயக்க மண்டைதீவு மனிதப் புதைகுழிகள் தொடர்பிலும் கரிசனை செலுத்த வேண்டும் - என்றார். (ஐ-03)

## நீதி கோரிய கையெழுத்து போராட்டம் கல்வியங்காட்டில்

யாழ்ப்பாணம், செப். 01

வடக்கு - கிழக்கு மனிதப் புதைகுழிகள், தமிழ் இனப்படுகொலைக்கு நீதி கோரிய கையெழுத்து போராட்டம் கல்வியங்காடு சந்தை முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பங்காளிக் கட்சியான ஈ. பி. ஆர். எல். எவ்வின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு, கிழக்கு மண்ணில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழிகள், தமிழ் இனப்படுகொலைகளுக்கு நீதியைக் கோருவதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் கையொப்பம் சேகரிக்கும் போராட்டம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மனித நுகர்வுக்கு பொருந்தாத 151 கிலோ மாட்டிறைச்சி அழிப்பு

கிளிநொச்சி, செப். 01

மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற 151 கிலோ மாட்டு இறைச்சியை கரைச்சி பிரதேச சபையினர், சுகாதார பரிசோதரர்களால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

சுகாதார பரிசோதகர்களுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக நேற்றுமுன்தினம் திருநகர் பகுதியில் இரகசியமாக இயங்கி வந்த மாடு கொல்களம் சுற்றி வளைக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச சபையின் பொறுப்பதிகாரி தலைமையில் விசேட ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

களவாக பிடிக்கப்படுகின்ற மாடுகள் சட்டவிரோதமான முறையில் குடிமக்கள் வாழுகின்ற பகுதிகளின் மத்தியில் எவ்வித அனுமதியும் - சுகாதார முறைமையும் இன்றி வெட்டி விற்கப்பட்டு வந்தமை இதன்போது கண்டறியப்பட்டது.

## தேசிய விளையாட்டு விழா; முல்லை. மாணவிக்கு தங்கம்



கொழும்பு, செப். 01

தேசிய விளையாட்டு விழாவில் குத்துச் சண்டை போட்டியில் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார் முல்லைத்தீவின் சசிகுமார் ஜெஸ்மிதா.

49ஆவது தேசிய விளையாட்டு விழா காலியில் நடக்கிறது. இதில், பெண்களுக்கான குத்துச் சண்டை போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதிலேயே ஜெஸ்மிதா முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றார். (ஐ)

## 'வன்மம்' நூல் அறிமுகம்!

யாழ்ப்பாணம், செப். 01

கிருஷாந்தி கொலை வழக்கு விசாரணை தொகுப்பான வன்மம் நூல் அறிமுக நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு செம்மணி சந்தியில் நடைபெறவுள்ளது.

தமிழர் வாழ்வுரிமை மையத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் தெ. மதுசூதனன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அருட்பணி வசந்தன், நா. இன்பநாயகம், தரிந்து உடுவரகெதர, யூட் டினேஷ், பொ. ஐங்கரநேசன், கத்யான அமரசிங்க, நடராஜா ஜனகன், ரனித்தா ஞானராஜா, உதயசீலன் கற்கண்டு, நடராஜா காண்டீபன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (ஐ)

## கிளிநொச்சியில் விழிப்புணர்வு

கிளிநொச்சி, செப். 01

கிளிநொச்சி ஆனைவிழுந்தான்குளத்தில் சிறுவர் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

ஆனைவிழுந்தான்குளம் கல்வாரி தேவாலயத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தப் பேரணி நடைபெற்றது.

மகிழ்ச்சியான குடும்பம் சிறுவர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்தப் பேரணி ஆனைவிழுந்தான் சந்தியிலிருந்து தேவாலயம் வரை சுமார் 2 கிலோமீற்றர் தூரம் வரை முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பேரணியில் அரச உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், சிறுவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## மின் தாக்கி விவசாயி பலி!

யாழ்ப்பாணம், செப். 01

மின்சாரம் தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்தார்.

கிளானை - கொல்லங்கலட்டியை சேர்ந்த 64 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் தனது விவசாய நிலத்தைப் பாதுகாக்க மின்சார வேலி அமைத்திருந்தார். அதில், சிக்கியே அவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-03)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 01

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் நாளை செவ்வாய்க்கிழமை மதியம் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் சுப்பையா உடையார் தெய்வானைப் பிள்ளை திறந்தவெளியரங்கில் அதிபர் திருமதி க. சுலபாமதி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும். இதில், பிரதம விருந்தினராக வட மாகாண கல்விப் பணிப்பாளர் யோ. ஜெயச்சந்திரன் சிறப்பு விருந்தினராக விக்ரோறியன் அ. கிருபானந்தமனுநீதி, கௌரவ விருந்தினராக விக்ரோறியன் சுப்பையா வரதராசா ஆகியோர் பங்கேற்பர்.

நினைவுப் பேருரையை சண்டிலிப்பாய் சிறுவர் பாதுகாப்பு அலுவர் விக்ரோறியன் ரி. ரவிமோகன் நிகழ்த்துவார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 01.09.2025 திங்கட்கிழமை ஈழநாடு
விசுவாவசு வருடம், ஆவணி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சமூக பொறுப்புள்ளவர்களின் கவனத்துக்கு...!

தேசியம் என்னும் ஒரு சொல்லை உச்சரித்துவிட்டால் அனைவரும் முக்தியடைந்து விடலாம் என்னும் ஒரு சமூக மற்றும் அரசியல் சூழலே தமிழ் சமூகத்தை ஆக்கிரமித்திருக்கிறது. அரசியல்வாதிகள் தொடக்கம் அரசியல்வாதிகளுக்கு புத்திபுகட்டுவதாகக் கூறிக் கொள்ளும் கருத்துரு வாக்கிகள், புத்திஜீவிகள், மதத் தலைவர்கள் வரையில் அனைவருமே தேசியத்துக்குள் தங்களுக்கான முக்தியைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், இறுதியில் அரசியலும் உருப்படவில்லை - சமூகமும் உருப்பட வில்லை.

உண்மையில், அரசியல் பலவீனமாக இருக்கின்ற இடங்களில்தான் சிவில் சமூகமும் கருத்துருவாக்கிகளும் புத்திஜீவிகளும் அதிகமான விழிப்புடனும் செயல்திறனுடனும் இருக்க வேண்டும். ஆனால், தேசியம், தேசம், நீதி, போர்க்குற்றம், இனப்படுகொலை இவ்வாறான சொற்களை உச்சரித்துவிட்டால் தங்களின் பணி முடிந்தது என்னும் வகையிலான ஒரு சடத்தனமான அறிவே தமிழர் மத்தியில் அறிவாகவும் ஆற்றலாகவும் போற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

பல விடயங்கள் தொடர்பில் பேச முடியும். ஓர் எரியும் பிரச்னையை மட்டும் இப்போது பார்ப்போம். ஏ-9 வீதியில் அடிக்கடி வாகன விபத்துகள் இடம்பெறுகின்றன. இதனால், பலர் உயிரிழந்திருக்கின்றனர். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்வேறு பணிகளுக்கு செல்பவர்கள் எனப் பலர் உயிரிழப்பதற்கு விபத்துகள் காரணமாக இருக்கின்றன. குறிப்பாக, அதிகமான விபத்துகள் கனரக வாகனமான டிப்பருடன் மோதுண்டே இடம்பெற்றிருக்கின்றன.

எப்போதாவது, விபத்துகள் இடம்பெறுவது உண்டு. ஆனால், ஏ-9 வீதியில் அடிக்கடி விபத்துகள் இடம்பெறுகின்றன. நாட்டின் வேறு எந்தவொரு பகுதியிலும் இடம்பெறாத வகையில் அதிகமான விபத்துகள் இடம்பெறுகின்றன. இவ்வாறான விபத்துகள் பெரும்பாலும் இறப்பிலேயே முடிவுறுகின்றன என்றால் அங்கு ஒரு சிக்கலான பிரச்னை உண்டு. சட்டம் ஒழுங்குக்கு புறம்பான வகையில் விடயங்கள் இடம்பெறுகின்றன அல்லது விபத்துகளை கட்டுப்படுத்துவதற்கான பிரத்தியேக நடவடிக்கைகள் இடம்பெறவில்லை அல்லது அதற்கான முயற்சிகளை அந்தப் பகுதி அரசியல்வாதிகளும் நிறுவனங்களும் மேற்கொள்ளவில்லை என்பது தானே பொருள்.

இறந்து கொண்டிருப்பது தமிழர்கள். எனவே, இந்த விடயத்தில் தலையீடு செய்ய வேண்டிய கடப்பாடு அந்தப் பகுதி பாராளுமன்ற உறுப்பி னருக்கு இல்லையா? சிவில் சமூகத்துக்கு இல்லையா? மதத் தலைவர்களுக்கு இல்லையா? புத்திஜீவிகளுக்கு இல்லையா? ஏன் இது பற்றி இதுவரையில் எவரும் பிரத்தியேக அக்கறை கொண்டு செயல்படவில்லை?

ஒரு சமூகப் பொறுப்பு வாய்ந்த ஊடகம் என்னும் வகையில் 'ஈழநாடு' இந்த விடயத்தை சமூகத்தை நோக்கி முன்வைக்கிறது. எவர் செயல்படாவிட்டாலும்கூட, விழிப்புணர்வுள்ள சமூகம் இந்த விடயத்தில் விழித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், இன்று யாரோ என்று நீங்கள் அமைதியாக இருந்தால் நாளை விபத்தின் கோரத் தாண்டவத்துக்கு பலியாகுபவர் நீங்களாகவும் இருக்கலாம் - உங்கள் அன்புக்குரிய வர்களாகவும் இருக்கலாம். இவ்வாறான விடயங்கள் அனைவருக்குமானது என்னும் அடிப்படையில் அனைவரும் விழிப்போடும் - பொறுப்போடும் செயல்பட முன்வர வேண்டும்.

ஒரு காலத்தில் தமிழ் சமூகத்தின் மத்தியில் பலவாறான விழிப்புக் குழுக்கள் இருந்தன. கிராமங்கள் தோறும் வாசிகசாலைகள் இருந்தன. ஆனால், இன்று அனைத்தையும் தேசியம் என்னும் ஒற்றைச் சொல் லுக்குள் தொலைத்துவிட்ட சமூகமாகவே தமிழ் சமூகம் சீரழிந்து கொண் டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மற்றவர்களை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் சமூகமாக உருச்சிதைந்து கிடக்கிறது. மக்களுக்காக மக்கள் சிந்தித்தால் அரசியல்வாதிகள் தாமாகத் திருந்துவார்கள்.

# ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நேரடி எண்ணெய் கொள்வனவு குறித்து இலங்கை அவதானம்!

கொழும்பு, செப். 01

நேரடி ஒப்பந்தத்தின் கீழ் எண்ணெய் வாங்குவதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தற்போது ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பெற்றோலிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை தனது முழு பெற்றோலியத் தேவையையும் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் இரண்டையும் இறக்குமதி செய்கிறது.

மேலும், எண்ணெய் இறக்குமதிக்கான விநியோகஸ்தர்களை திறந்த கேள்விமனு செயல்முறை மூலம் தேர்ந்தெடுக்கிறது.

இந்த நிலையில் நேரடி எண்ணெய் கொள்முதல்களுக்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிகாரிகளுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

அதன்படி, ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள முக்கிய எண்ணெய் நிறுவனமான அந்நாட்டு அரசுக்குச் சொந்தமான அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடந்து வருவதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஜனாதிபதி மெஹமட் பின் சயீத் அல் நஹ்யானின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்த ஆண்டு தொடக்கத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

மேலும், திருகோணமலையை பெற்றோலிய மையமாக மேம்படுத்துவதற்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளையும் உள்ளடக்கிய முத்தரப்பு ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது.

மேலும், அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவ இலங்கை திட்டமிட்டுள்ளது.

இது சினோபெக்கின் 3.7 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டாகும் என்பதும் விசேட அம்சமாகும். (அ)

# அமைச்சர் ஹினிதும சுனில் உடன் பதவி விலகவேண்டும்

*சிஹல ராவய அமைப்பு வலியுறுத்து*

கொழும்பு, செப்.01

பௌத்தர்களை ஒடுக்க முயலும் அமைச்சர் ஹினிதும சுனில் செனெவியை பதவியில் இருந்து நீக்கும் வரை தங்களது போராட்டம் தொடரும் என சிஹல ராவய அமைப்பின் பிரசார செயலாளர் மதுபாஷன பிரபாத் ரணஹங்சா தெரிவித்துள்ளார்.

பௌத்த மதத்திற்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளும் ஒடுக்கு முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து, பௌத்தசாசன அமைச்சுக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சர் ஹினிதும செனெவியை நீக்கும்வரை, இந்த போராட்டம் கிராமத்திலிருந்து நகரத்திற்கும், நகரத்திலிருந்து நாட்டுக்கும் பரவும்.

அதற்காக நமது முன்னோர்களால் வழங்கப்பட்ட கடமைகளை பூர்த்தி செய்ய, எங்கள் எலும்பு, இறை, நரம்புகள், உயிர் அனைத்தையும் அர்ப்பணித்து போராடுவோம்.

இந்த அரசாங்கம் பௌத்த மதத்திற்கான செலவுகளை குறைக்க தயாராகின்றது.

விகாரைகளுக்கு வாகனங்களை வழங்குவது, பௌத்த விகாரைகளுக்கான பாதுகாப்பு உள்ளிட்ட பல விடயங்களை ரத்து செய்ய தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டின் 75 வீதமானோர் பௌத்த மதத்தினர்.

இந்த மதத்தை சார்ந்தவர்களே அதிக வரி செலுத்தி அரசை நடத்துகின்றனர்.

அரசியலமைப்பின் இரண்டாம் அத்தியாயத்தின் ஒன்பதாம் பிரிவின்படி, பௌத்த உமதத்தை பாதுகாக்கும் கடமை அரசாங்கத்திற்கு உண்டு என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு இருக்கும் போது, அரசாங்கம் அதனை பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுப்பதில் என்ன தவறு இருக்கின்றது? - என்றார். (அ)

## சுற்றிவளைப்பில் 5,680 பேர் கைது

கொழும்பு, செப். 01

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 5,680 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸார், இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற் படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 20 பேரும் சந்தேகத்தின் பேரில் 815 பேரும் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 315 பேரும் திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 210 பேரும் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 86 சாரதிகளும் கவனக் குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 56 சாரதிகளும் ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4178 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் முக்கிய விஷயங்களை நீங்களே நேரடியாக சென்று முடிப்பது நல்லது. குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்**

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கல்யாணப் பேச்சு வார்த்தை கைகூடி வரும். ஆடை ஆபரணம் சேரும். மனைவி வழியில் நல்ல செய்தி வரும். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**

உங்களை சுற்றி இருப்பவர்களை புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**

வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**சிம்மம்**

தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தாயாருடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள்.

**கன்னி**

பேச்சில் முதிர்ச்சி தெரியும். சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வாகனப் பழுதை சரி செய்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**

குடும்பத்தில் இதுவரை இருந்த கூச்சல் குழப்பங்கள் நீங்கிமகிழ்ச்சி தங்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**விருட்சிகம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் வந்து நீங்கும். பணம் நகையை கவனமாக கையாளுங்கள்.

**தனுசு**

எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். நெருங்கியவர்கள் சிலரால் தர்ம சங்கடமான சூழ்நிலை ஏற்படும். உடல்நலத்தில் கவனம் தேவை.

**மகரம்**

பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். கண்டும் காணாமல் இருந்தவர்கள் வலிய வந்து பேசு வார்கள். எதையும் சாதிக்கும் மன வலிமை வரும்.

**கும்பம்**

கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். பயணங்களால் பயனடைவீர்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள்.சாதிக்கும் நாள்.

**மீனம்**

கணவன் மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் செல்லுங்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். அதிர்ஷ்டமான நாள்.

# யாழில் இலஞ்சம் பெற முயன்ற மதுவரி திணைக்கள அதிகாரிகள் மூவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 01

இலஞ்சம் பெற முயன்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ்ப்பாணம் - சங்கானை மதுவரித் திணைக்கள அலுவலக அதிகாரிகள் மூவர், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபாலவின் கீழ் இயங்கும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாதகல் பகுதியில் ஹெரோயினுடன் சந்தேகநபர் ஒருவரை கைது செய்வதற்கு மதுவரித் திணைக்கள அதிகாரிகள் முயற்சித்தனர். பின்னர் அவரை கைது செய்யாமல் விடுவதற்காக 30 இலட்சம் ரூபாய் இலஞ்சம் கோரினர்.

ஆனால், போதைப்பொருளை வைத்திருந்தவர் 20 இலட்சம் ரூபாய் இலஞ்சம் வழங்குவதாக ஒப்புக்கொண்டார். இந்த நிலையில் அதிகாரிகள், சந்தேக நபரை விட்டுவிட்டு இலஞ்சப்பணத்தை சித்தங்கேணி பகுதியில் உள்ள மதுவரித் திணைக்கள அலுவலகத்துக்கு கொண்டு வருமாறு கூறிவிட்டுச் சென்றுள்ளனர்.

போதைப்பொருள் வைத்திருந்தவரின் தரப்பினர் இது குறித்து காங்கேசன்துறை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கிவிட்டு இலஞ்சப் பணத்தை கொடுப்பதுபோல் பாசாங்கு செய்வதற்காக அவர்களது அலுவலகத்துக்கு சென்றனர்.

அங்கு இலஞ்சப் பணத்தை கொடுப்பதற்கு முயற்சித்தவேளை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால், மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மூவரும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட அதிகாரிகள் மூவரிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவர்கள் மூவரும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (எ-05)

# முல்லைத்தீவு மாவட்டத்துக்கு தனியாக விளையாட்டு கட்டடத்தொகுதி தேவை

## ரவிகரன் எம்.பியால் தீர்மானம் முன்வைப்பு

முல்லைத்தீவு, செப். 01

முல்லைத்தீவு மாவட்டத்துக்கென விளையாட்டுக் கட்டடத் தொகுதி தேவையென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவில் தீர்மானமொன்றை முன்மொழிந்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், குறித்த தீர்மானத்தை உரிய தரப்பினருக்கு நடவடிக்கைக்காக அனுப்பிவைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் ரவிகரன் எம். பி. மேலும் கூறுகையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டுக் கட்டடத்தொகுதி இல்லாத நிலைகாணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே பாராளுமன்றில் நான் பேசியுள்ளதுடன், அமைச்சு சார் ஆலோசனைக்குழுக் கூட்டத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டுக் கட்டடத் தொகுதி அமைக்கப்படவேண்டுமெனப் பேசியிருக்கின்றேன்.

முல்லைத்தீவு மாவட்டமென்பது பின்தங்கிய மாவட்டமாக காணப்படுகின்றது. இருப்பினும் இந்த மாவட்டத்திலும் இளைஞர்கள் இருக்கின்றார்கள் என்பதை அனைவரும் உணர்ந்து செயல்படவேண்டும். எனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டுக் கட்டடத்தொகுதி அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இந்த விடயத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் மற்றும் ஆளுநர் ஆகியோரும் கரிசனையோடு செயல்படுகின்றனர்- என்றார். (எ)

# உணவு பாதுகாப்பு வலையமைப்பை மேம்படுத்த யாழில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 01

உணவுப் பாதுகாப்பு தொடர்பான செயலமர்வு யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், உணவுப் பாதுகாப்பு வலையமைப்பை மேம்படுத்துவதன் மூலம் வறுமை நிலைமையையும் உணவுப் பாதுகாப்பற்ற விடயங்களையும் அடையாளப் படுத்தி தரவுகளை சேகரித்து, திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது சரியான தரவுகள் அவசியம். தரவுகள் சேகரிப்பு முழுமையடைந்து ஆய்வு செய்யப்பட்டு இவ்வருடத்துக்கான முதலாவது அறிக்கை வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார். ஆய்வின் மூலம் உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்த உதவியாகவிருக்கும் எனவும் கூறினார். மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உலக உணவுத் திட்டம் பல ஆண்டுகளாக பாரிய பங்களிப்புக்களை வழங்கி வருவதாகவும் அந்த வகையில் வடக்கு - கிழக்கில் உலக உணவுத் திட்டத்தை கையாண்ட அதிகாரி நியூமத்தின் பங்களிப்பை பாராட்டியதுடன் கொழும்பிலிருந்து வருகை தந்த உத்தியோகத்தர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு தொடர்பான திட்டங்களை நடைமுறைப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு நல்குமாறும் அரசாங்க அதிபரால் கேட்டுக் கொள்ளப்பட்டது.


இந்தக் கலந்துரையாடலில் அமைச்சின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட புள்ளி விவர பிரதிப் பணிப்பாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (எ)

# நெவாட் நிர்வாக கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 01

நெவாட் நிர்வாக கட்டடத் திறப்பு விழா கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் அன்ரோ டெனிசியஸ் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது .

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மீன்பிடியல் துறைத் தலைவர் கலாநிதி திருமதி எஸ். சுதர்சினியும் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வு, யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆசியுரையுடன் நடைபெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடருக்கு முன்னர் -

# கொழும்பில் இயங்கும் இராஜதந்திரிகளை சந்திக்கிறார் வெளிவிவகார அமைச்சர்!

கொழும்பு, செப். 01

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்கு செல்லும் முன்னர் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கொழும்பை தளமாகக் கொண்ட இராஜதந்திரிகளை சந்திக்கவுள்ளார் என்று கூறப்படுகிறது.

நாட்டின் மனித உரிமைகள் தொடர்பான பிரச்னைகளை தீர்ப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் இதன் போது அமைச்சர் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிப்பார் என்றும் கூறப்படுகிறது.

கடந்த செப்ரெம்பரில் புதிய அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து பொறுப்புக்கூறல் பிரச்னைகளைத் தீர்ப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்த கண்ணோட்டத்தை வழங்குவதற்காக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தை இரத்து செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், சுயாதீன வழக்கு தொடுநர் பணிமனையை அமைத்தல் ஆகியவை இதில் அடங்குகின்றன.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொலிஸ்நிலையம் சென்று திரும்பியவர் சுட்டுக்கொலை

சிலாபம், செப். 01

நீதிமன்ற உத்தரவின்படி பொலிஸ் நிலையத்துக்கு சென்று கையொப்பமிட்டு திரும்பிக் கொண்டிருந்தவர் இனந்தெரியாத குழுவால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

புத்தளம் - வென்னப்புவ பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

உயிரிழந்த நபர், வழக்கு ஒன்று தொடர்பில் பொலிஸ் நிலையத்துக்கு சென்று கையொப்பமிட்டு விட்டு மற்றொரு நபருடன் மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தார்.

அப்போது, வான் ஒன்றில் வந்தவர்கள் அவர்களை கூர்மையான ஆயுதத்தால் தாக்கினர். இதைத் தொடர்ந்து ஒருவரை சுட்டுக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுக்கு ரிவால்வர் ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதேநேரம், உயிரிழந்தவருடன் இருந்த மற்றைய நபர் தப்பிச் சென்றுள்ளார் என்று கூறப்பட்டது. (ஐ)

# ரணிலின் செயலருக்கு சி. ஐ. டி. அழைப்பு!

கொழும்பு, செப். 01

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏகநாயக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் பிரிட்டன் பயணத்துக்காக அரச நிதியை தவறாக பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காகவே இன்று திங்கட்கிழமை குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு வருகை தருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பாதாள குழுவினரை கைது செய்த பொலிஸாருக்கு கௌரவமளிப்பு!



கொழும்பு, செப். 01

கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட குழுவினரை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தோனேசிய பொலிஸ் அதிகாரிகளுக்கு பாராட்டுத் தெரிவித்து விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த நடவடிக்கையில் இணைந்த இலங்கை பொலிஸ் அதிகாரிகளுக்கும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரால் பாராட்டப்பட்டனர்.

கடந்த 27ஆம் திகதி இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட இலங்கையை சேர்ந்த பாதாள உலகக் குழுத் தலைவர்கள் ஐவர் நேற்று முன்தினம் இரவு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இவ்வாறு சந்தேகநபர்கள் நேற்று அழைத்து வரப்பட்ட போதே கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இரு நாடுகளின் பொலிஸ் அதிகாரிகளும் பாராட்டப்பட்டு கௌரவமளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பொது மக்கள் பாதுகாப்புஅமைச்சர் ஆனந்த விஜபால, பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# 2 ஆயிரம் கப் ரக வாகனங்களை இறக்குமதி செய்ய அரசு திட்டம்

கொழும்பு, செப். 01

அரச நிறுவனத் தலைவர்களுக்காக 2 ஆயிரம் கப் ரக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் ருவான் செனரத் தெரிவித்தார்.

"அடிமட்ட அளவில் அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்த, மாகாண அரச நிறுவனங்களின் தலைவர்கள் கிராமங்களுக்கு செல்வதற்கு வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். எனவே, எங்களுக்கு சில வாகனங்கள் தேவை.

நாட்டில் உள்ள ஒவ்வோர் அரச நிறுவன தலைவர்களுக்கும் அவர்களின் போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் 2 ஆயிரம் கப் ரக வாகனங்களை இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# ராஜிதவும் வீட்டு உணவு கோருகிறார்

கொழும்பு, செப். 01

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன வீட்டிலிருந்து உணவு பெற அனுமதி கோரியுள்ளார் என்று சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெலிக்கடை சிறைச்சாலையின் "என்" சிறைக்கூடத்தில் ராஜித சேனாரத்ன தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, சிறைச்சாலை மருத்துவர்கள் ராஜித சேனாரத்னவை பரிசோதித்திருந்தனர்.

எனினும், மருத்துவமனையில் சேர்க்க வேண்டிய அளவுக்கு அவரின் உடல்நிலை மோசமாக இல்லை என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

# முதலீட்டுக்கான அரச காணிகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, செப். 01

முதலீட்டுக்கான அரச காணிகளை அடையாளம் காண்பதற்கான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலக மட்டத்தில் இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று காணி ஆணையாளர் நாயகம் சந்தன ரணவீரஆராச்சி தெரிவித்துள்ளார்.

குறித்த காணிகளை முதலீட்டாளர்களின் தேவைக்கேற்ப விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, மகாவலி வலயங்களில் 5 ஆயிரத்து 300 ஹெக்ரெயர் காணியை முதலீட்டுக்காக ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எச். எம். ஜே. கே. ஹேரத் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# அரச வங்கிகளின் ஊழியர்கள் வேலைநிறுத்தத்துக்கு தயார்!

கொழும்பு, செப். 01

பிரதான மூன்று அரச வங்கிகளின் ஊழியர்களும் தொழிற்சங்க போராட்டத்துக்கு தயாராகி வருகின்றனர் என்று தெரிய வருகின்றது.

வருடாந்த "போனஸ்" கொடுப்பனவு உள்ளிட்டவற்றுக்கு நியாயமற்ற முறையில் வரையறைகள், அந்தக் கொடுப்பனவுக்கு அதிக வரி அறவிடப்படுகின்றமை உள்ளிட்ட பிரச்னைகளை முன்வைத்து அவர்கள் இந்த வாரம் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அத்துடன், பல தசாப்தங்களாக தாம் பெற்று வந்த உரிமைகள் பறிக்கப்படுகின்றன. சலுகைகள் நீக்கப்படுகின்றன இதற்கெதிராகவே நாம் வங்கிகளை மூடி வீதிக்கு இறங்குவுள்ளோம் என்று இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் ரஞ்சன் சேனாநாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)

# "சிறுவர்களும் பாதாள குழுவில்"

கொழும்பு, செப். 01

15 வயது சிறுவர்கள்கூட பாதாள உலகக் குழுவில் இருக்கின்றனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

இதேநேரம், நாட்டில் சுமார் 14,834 சிறார்கள், பல்வேறு சூழ்நிலைகளால் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கின்றனர் என்று நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் நடந்த போதைப் பொருள் தடுப்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு நிகழ்ச்சியின் போது இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன. (ஐ)

# மருத்துவர்களின் மேலதிகநேர கொடுப்பனவு அதிகரிப்பு!

கொழும்பு, செப். 01

இதய நுரையீரல் மருத்துவ அதிகாரிகளின் மேலதிக நேர கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் தர இதய நுரையீரல் மருத்துவ அதிகாரிகளுக்கான மேலதிக நேர கொடுப்பனவு 151 ரூபாயாலும் இரண்டாம் தர இதய நுரையீரல் மருத்துவ அதிகாரிகளின் மேலதிக நேர கொடுப்பனவு 65 ரூபாயாலும் அதிகரிகப்பட்டுள்ளது.

அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு கடந்த ஏப்ரல் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும். இந்த நிலுவைத்தொகை இந்த மாத சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும் - என்றும் அறிவிக்கப்பட்டது. (ஐ)

# ரணிலுக்காக சேர்ந்த அனைவரும் கள்வரே

## பிரதி அமைச்சர் நளின் ஹேவகே

கொழும்பு, செப். 01

"ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, மகிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, சம்பிக்க ரணவக்க, மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அனைவரும் கள்வர்களே. ரணில் கைது செய்யப்பட்டவுடன், அச்சத்தில் இவர்கள் ஒன்றிணைந்துள்ளனர். இவர்கள் இணைந்தால் கள்வர்களை கைது செய்வது இன்னும் இலகுவாகும்", என்று தொழிற்பயிற்சிகள் பிரதி அமைச்சர் நளின் ஹேவகே தெரிவித்துள்ளார்.

மேலும், ரணில் விக்கிரமசிங்க இழைத்த குற்றங்களையும் தவறுகளையும் மறைக்க முடியாது.

அவர் இழைத்த குற்றங்களில் ஒன்றுக்கு மாத்திரமே விளக்கமறியல் சென்றார். ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, மகிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, சம்பிக்க ரணவக்க, மைத்திரிபால சிறிசேன அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர். இவர்கள் அனைவருமே குற்றமிழைத்தவர்கள். ஆங்காங்கு ஒளிந்திருந்த அவர்கள் தற்போது ரணில் கைதானதால் அச்சமடைந்துள்ளனர்.

எனவே இவர்கள் ஒன்றிணையும் போது பெரிய பூட்டு ஒன்றைப் பூட்டினால் அனைவரையும் ஒரே சந்தர்ப்பத்தில் கைது செய்ய முடியும். தாம் குற்றவாளிகள் என்பதை தெரிந்து கொண்டு தான் அவர்கள் ஒன்றிணைந்து தப்பிக்க முயற்சிக்கின்றனர் - என்று நேற்று முன்தினம் கொழும்பில் ஊடகங்களை சந்தித்தபோது தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொத்துவில் அறுகம்குடாவில் வர்த்தகக் கண்காட்சி திறப்பு

பொத்துவில், செப். 01
வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை இலக்காகக் கொண்டு தொழில் மற்றும் தொழில்முனைவோர் அமைச்சின் கீழ் செயல்படும் தேசிய தொழில் அபிவிருத்தி ஆணையகம் ஏற்பாடு செய்த "Made in Sri Lanka" வர்த்தகக் கண்காட்சி அம்பாறை மாவட்டத்தின் அழகிய சுற்றுலாத் தளமான அருகம்குடா கடற்கரையில் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

தொழில் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸ மற்றும் அம்பாறை மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா ஆகியோரின் பங் குபற்றலுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் பலரும் கலந்து கொண்டனர்.

உள்ளூர் உற்பத்தியாளர்களின் தயாரிப்புகளை வெளிநாட்டு நுகர்வோருக்கு அறிமுகப்படுத்துவது இந்தக் கண்காட்சியின் முதன்மை நோக்கமாகும். இதற்காக கிராமிய மட்டத்தில் தயாரிக்கப்பட்ட தரமான தயாரிப்புகளுக்கான 60இற்கும் மேற்பட்ட விற்பனை அரங்குகள் இணைக்கப்பட்டிருந்தன. (எ)

# முத்துநகர் விவசாயிகள் ஐவரையும் விடுதலை செய்ய கோரி போராட்டம்

திருகோணமலை, செப். 01
திருகோணமலை, சீனக்குடா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முத்துநகர் விவசாயிகள் ஐவரையும் விடுதலை செய்யக் கோரி கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை சீனக்குடா பொலிஸ் நிலையம் முன்பாக நடைபெற்றது.

கடந்த 27 ஆம் திகதி முத்துநகர் பகுதி விவசாயக் காணியில் தனியார் நிறுவனத்தினர் பெக்கோ இயந்திரம் மூலமாக சூரிய மின் சக்தித் திட்டம் தொடர்பான வேலைத் திட்டத்தை ஆரம்பிக்க முற்பட்ட வேலையில் அங்கு குறித்த விவசாயிகள் சென்று தடுத்து நிறுத்த முற்பட்ட வேலையில் வாய்த்தகராறு ஆரம்பமானதுடன் பின்னர் கலவரமாகி தனியார் நிறுவன ஊழியர்கள் பொல்லால் விவசாயிகளை தாக்கியுள்ளனர்

இதனைத் தொடர்ந்து சீனக்குடா பொலிஸாரால் ஐந்து விவசாயிகள் கைது செய்யப் பட்டு திருகோணமலை நீதிமன் றில் முற்படுத்தப்பட்ட நிலை யில் எதிர்வரும் 04ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிவான் உத்தரவிட்டுள் ளார்.

குறித்த விவசாயிகளை விடுதலை செய்யக் கோரியும் பெக்கோ இயந்திர சாரதியைக் கைது செய்யக் கோரியும் நேற்று முன்தினம் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முத்துநகர் விவசாயிகளை தாக்கிய நபர்களைக் கைது செய், அநியாயமாய் சிறையில் அடைக்கப்பட்ட விவசாயிகளை உடனடியாக விடுதலை செய், நிறுவனங்களுக்கு வழங்கிய விவசாய நிலங்களை விவசாயிகளுக்கு திருப்பிக் கொடு, திருகோணமலையின் வளங்கள் சூரையாடப்படுவதை நிறுத்து, எங்கள் காணிகளை எங்களுக்கு கொடு, கம்பனிகளுக்கு இலாபம் எங்களுக்கு நடுத்தெரு, போன்ற பல வாசகங்களை ஏந்தியவாறும் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# கோமாரியில் விபத்து: ஒருவர் பலி; 52 பேர் காயம்

பொத்துவில், செப். 01
பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 52 பேர் காயமடைந்தனர்.

அம்பாறை, அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியில் கோமாரி பகுதியில் நேற்று முன்தினம் மாலை ஹெப்பிட்டிபொல பகுதியிலிருந்து சுற்றுலா சென்ற பேருந்தே விபத்துக்குள்ளானது.

குறித்த பேருந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதுடன்சாரதியின் தூக்கக்கலக்கமே விபத்துக்கு காரணம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் விபத்தில்



உயிரிழந்தவர் வெலிமடை பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய நபர் என பொலிஸார் தெரிவித்தனர். குறித்த விபத்தில் சிக்கிய வர்கள் வெலிமடையிலிருந்து நேற்று முன்தினம் காலை பயணத்தை மேற்கொண்டு அம்பாறை தீகவாபி ராஜமகா விகாரைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் அங்கிருந்து பொத்துவில் அறுகம்குடா பிரதேசத்துக்கு செல்லும் வழியில் கோமாரியில் இந்த விபத்து இடம்பெற்றது.

குறித்த விபத்தில் காயமடைந்தவர்கள் பொத்துவில் மற்றும் திருக்கோவில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ)

# கிளிவெட்டி - குமாரபுரத்தில் யானைகளால் அச்சுறுத்தல்

மூதூர், செப். 01
கிளிவெட்டி - குமாரபுரம் பகுதியில் அச்சுறுத்தல் விடுத்து வரும் காட்டு யானைகளை விரட்டுவதற்கு கோரிக்கை விடுத்தும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

திருகோணமலை, மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட குமாரபுரம் கிரா மத்தை அண்மித்துள்ள குளப் பகுதிக்குள் காட்டு யானைகள் தங்கி நின்று மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்து வருவதாகவும் குறித்த யானைகளை விரட்டு வதற்கு வனஜீவ ராசிகள் திணைக்கள அதிகாரிக ளுக்கு தகவல் தெரிவித்தபோது, தங்களுக்கு போதிய ஆளணி இல்லை என பதிலளித்ததாக அப்பகுதி மக்கள் கூறினர்.

தங்கநகர் கிராமத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை யானை தாக்கி இரண்டு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்ததாகவும் உயிர்ச்சேதம் ஏற்பட்ட பின்னர் அரசாங்கம் தரும் பணத்தை வைத்து என்ன செய்வது எனவும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அரசாங்கம் காட்டு யானைக ளிடமிருந்து மக்களை பாதுகாக்க முறையான திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என வும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# கண்டி மருத்துவமனையின் 28 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பு

கண்டி, செப். 01
கண்டி தேசிய வைத்தியசாலைக்கு சொந்தமான 58 ஏக்கர் நிலத்தில் 28 ஏக்கர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்று மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் இரேஷா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த நிலங்களில் கட்டடங்கள் நிர்மாணிக்கும் பணிகள் தொடர்ந்து நடக்கின்றன. இதனால்,

மருத்துவமனையின் செயல்பாடுகளை பராமரிப்பதில் கடுமையான சிரமங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

நாட்டின் இரண்டாவது பெரிய மருத்துவமனையான கண்டி தேசிய மருத்துவமனையில் 80 நோயாளர் விடுதிகள், 11 தீவிர சிகிச்சை பிரிவுகள் மற்றும் பிற சிகிச்சை பிரிவுகள் உள்ளன.

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் தினமும் ஆயிரக்கணக்கானவர்கள் இங்கு மருத்துவ சேவையை பெறுகின்றனர்.

இந்த நிலையில், மருத்துவமனையின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு, கட்டுமானங்கள் நடக்கின்றன.

இதனால், மருத் துவமனையின் சூழல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட் டது. (ஐ)

# தங்கம், வெள்ளி கொள்ளை சந்தேகநபர் ஒருவர் கைது!

கொழும்பு, செப். 01
அடகு பிடிக்கும் கடைக்குள் நுழைந்து சுமார் 35 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கம், வெள்ளி பொருட்களை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டியில் சுமார் 3 மாதங்களுக்கு முன்னர் நடந்த கொள்ளைச் சம்பவம் தொடர் பிலேயே சந்தேகநபர் கைதானார். கைதானவர் சூதாட்டத்துக்கு அடிமையானவர் என்றும் அவரிடமிருந்து 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மாத்தளையின் யானைகளால் பயிர்கள் அழிவு

கொழும்பு, செப். 01
மாத்தளை யட்டவத்தை பிரதேசத்தில் புதிதாக காட்டு யானைகளால் அழிவுஏற்பட்டுள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

மாத்தளையின் யட்டவத்தை, கம்மல்ல, திவில்ல ஆகிய பிரதேசங்களுக்குள் நுழைந்த யானைகள் கிராமங்களுக்குள் புகுந்து விவசாய பயிர்களை அழித்துள்ளன என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அத்துடன், சேனைப் பயிர் செய்கைகளை மேற்கொள்பவர்களின் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மத்திய மாகாண ஆளுநருடன் யுனிசெவ் பிரதிநிதி சந்திப்பு



கண்டி, செப். 01
மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபய கோன யுனிசெவ் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு பிரிவின் தலைவர் டியோனா எஸ்லனிசிவிலி சந்தித்தார்.

கண்டியில் உள்ள ஆளுநரின் பணிமனையில் இந்த சந்திப்பு நடைபெற்றது.


இதன்போது, நாட்டில் அமைக்கப்படவுள்ள "சிறுவர் நட்பு தொடர்பான மத்திய நிலையத்தின்" நிர்மாண பணி குறித்து ஆராயப்பட்டது. இந்தத் திட்டத்தை இந்த மாதத்தில் ஆரம்பிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது. (ஐ)

# பேராதனை பல்கலை பேராசிரியர் ஜப்பான் தூதுவரால் கௌரவிப்பு!

கண்டி, செப். 01
பேராதனை பல்கலைக்கழக, பல்மருத்துவ பீடத்தின் மூத்த பேராசிரியர் சஜீவ் ஆரியசிங்க ஜப்பானிய தூதுவரால் விசேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் நட்புறவையும் ஒத்துழைப்பையும் கட்டியெழுப்புவதில் 22 ஆண்டுகள் சிறந்த பங்களிப்பை வழங்கியதற்காகவே பாராட்டப்பட்டார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வில்




இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் இசோமாட்டாவால், பேராசிரியர் சஜீவ் ஆர்யசிங்க வுக்கு இந்த விருதை வழங்கி வைத்தார்.

# 9 வளைவு பாலம் அருகே தீ பரவல்

பதுளை, செப். 01
பதுளை - எல்ல தெமோதர ஒன்பது வளைவு பாலம் அருகே நேற்று பிற்பகல் திடீரென தீ பரவியதாக பதுளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், பொலிஸார் இணைந்து தீயை கட்டுப்படுத்தினர்.

வறட்சியால் தீ வேகமாக பரவி வருவதாகவும், தீ பரவலுக்கான காரணம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

கடவுச்சீட்டு பணிமனையை ஆரம்பித்து வைப்பார். அங்கிருந்து, யாழ். பொது நூலகத்துக்கு செல்வார்.

இதன் பின்னர், மதியம் 1.30 மணியளவில் மண்டைதீவில் அமையவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதான நிர்மாண பணிகளை தொடக்கி வைப்பார். அத்து டன், வேறு சில நிகழ்வுகளிலும் சந்திப்புகளிலும் ஈடுபடுவார்.

இதைத் தொடர்ந்து நாளை செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவுக்கு செல்லும் ஜனாதிபதி அநுர, வட்டு வாகல் பாலத்தின் புனரமைப்பு பணியை தொடக்கி வைப்பார். அத்துடன், தென்னை முக்கோண வலய பணிகளையும் ஆரம்பித்து வைப்பார். (ஐ)

## எரிபொருள்களின்...

விலை திருத்தத்துக்கு அமைவாகவே எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 92 ஒக்ரென் பெற்றோல் லீற்றர் 6 ரூபாயால் குறைவடைந்து 299 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஓட்டோ டீசலும் லீற்றர் 6 ரூபாயால் குறைக்கப்பட்டு 283 ரூபாயாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், சுப்பர் டீசல் லீற்றர் 12 ரூபாயால் குறைவடைந்து 313 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், 95 ஒக்ரென் பெற்றோல் (341 ரூபாய்), மண்ணெண்ணெய் (185 ரூபாய்) என்பவற்றின் விலைகள் மாற்றமின்றி பேணப்படுகின்றன. (ஐ)

## 12மனித...

வாசிப்புமீதான) விவாதம் நடைபெறும். 2 ஆம் வாசிப்புமீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அது நிறைவேற்றப்பட்ட பின்னர் 3ஆம் வாசிப்புமீதான விவாதம் நடை பெறும். இது அமைச்சுகளுக்குரிய நிதி ஒதுக்கீடுகளைக் குறிக்கும்.

டிசெம்பர் நடுப்பகுதியில் வரவு - செலவு திட்டம்மீதான இறுதி வாக்கெடுப்பு நடைபெறும்.

வரவு - செலவுத் திட்டத்தின் முன்னோடியான ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் எதிர்வரும் ஒக்ரோபர் சபையில் முன்வைக்கப்படும். இது முதலாம் வாசிப்பாக கருதப்படும். இது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2ஆவது வரவு - செலவுத் திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ்நாட்டு...

புனரமைப்பு பணிகளை இன்றைய தினம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தொடக்கி வைக்கவுள்ளார். அவரின் வருகையையொட்டி, அந்தப் பகுதியை அழகுபடுத்தும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையிலேயே அந்தப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மீனவர்களின் படகுகள் ஜே.சி.பி வாகனம் மூலம் உடைக்கப்பட்டு அங்கிருந்து அகற்றப்படுகின்றன.

இந்தப் படகுகள் கடந்த காலங்களில் நாட்டின் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைப்பற்றப்பட்டவையாகும். இவ்வாறு 124 படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான வழக்குகள் நீதிமன்றில் நிலுவையிலுள்ளன.

எனினும், முடிவுற்ற வழக்குகளின் தீர்ப்புகளின் பிரகாரம் 33 படகுகள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன. 7 படகுகளை தமிழ்நாட்டு மீனவர்களிடம் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டது. இந்தப் படகுகளை அண்மையில் தமிழ்நாட்டு மீனவர் குழு வந்து பார்வையிட்டு சென்றிருந்தது.

இந்த நிலையிலேயே, அரசுடைமையாக்கப்பட்ட 33 படகுகளும் ஜே.சி. பி. வாகனம் மூலமாக உடைத்து அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு கொண்டு செல்லப்பட்டன. (ஐ)

## கோட்டாபயவும்...

கட்டுப்படுத்தத் தவறியமை தொடர்பில் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படை யிலேயே கோட்டாபய ராஜபக்ஷ விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

அவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முற்படும் திகதி அறிவிக்கப்படவில்லை. எனினும், அவரின் வெளிநாட்டுப் பயணம் நிறைவடைந் ததும் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படும் என்று குற்றப் புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## 12மனித...

இதன்போது, 12 எலும்புக்கூடுகள் புதைகுழிகளிலிருந்து புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. இதனால், இங்கு கண்டறியப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 209ஆக அதிகரித்தது.

இதேநேரம், நேற்றைய தினம் 10 எலும்புக்கூடுகள் புதைகுழிகளிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டன. இதன்மூலம் அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 191ஆக உயர்ந்துள்ளது.

இன்று திங்கட்கிழமையும் அகழ்வு பணிகள் நடைபெறவுள்ளன. (ஐ)

## இலங்கையின்...

- செயலற்ற தன்மை - தண்டனை இன்மையால் ஏற்பட்ட ஒரு தேசிய காயம்" ஆகும்.

தமது அன்புக்குரியவரைப் பற்றிய பதில்கள் இல்லாமல் விடப்படும் வலி காலத்தால் மட்டுமே குணப்படுத்த முடியாத அதிர்ச்சி. உண்மை மற்றும் நீதி இல்லாததால் துன்பம், ஆழமடைகிறது - என்றும் அவர் கூறினார்.

மேலும், நீதி, உண்மை, இழப்பீடுகள் ஆகியவை நல்லிணக்கம், நிறுவனங்கள் மீதான நம்பிக்கை, இலங்கையர்கள் நீண்டகாலமாகத் தேடிக்கொண்டிருக்கும் நிலையான அமைதியின் பிரிக்க முடியாத அடித்தளங்கள். வலுக்கட்டாயமாக காணாமல் போவதிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாட்டை அங்கீகரிப்பது, காணாமல் போனவர்கள் தொடர்பான பணிமனை (ஓ.எம்.பி.) மற்றும் இழப்பீடுகளுக்கான பணிமனை ஆகியவற்றை நிறுவுவது உட்பட இந்த வேதனையான மரபை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் குடும்பங்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் எதிர்கொள்ளும் கண்காணிப்பு, அச்சுறுத்தல்கள், மிரட்டல் மற்றும் பழிவாங்கல்கள் குறித்தும் ஐக்கிய நாடுகள் சபை கவலை கொண்டுள்ளது.

இந்த நிலையில், தங்கள் உரிமைகளை பயன்படுத்துவதில் ஈடுபட்டுள்ள அனைவரும் தண்டிக்கப்படக்கூடாது, பாதுகாக்கப்பட வேண்டும்.

கடந்த ஜூன் மாதம் இலங்கை வந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களைச் சந்தித்து உண்மையை வெளிக்கொணர்வது ஓர் அடிப்படை உரிமை என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார்

மனிதப் புதைகுழி தொடர்பில் விசாரிக்க அவர் விடுத்த அழைப்பு, கடந்த காலத்தை தைரியத்துடனும் வெளிப்படைத்தன்மையுடனும் எதிர்கொள்ள வேண்டியதன் அவசரத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இந்த செயல்பாட்டில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து ஆதரவை வழங்குகிறது.

இந்த நாளிலும், ஒவ்வொரு நாளும், தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடும் ஒவ்வொரு குடும்பத்துடனும் ஐக்கிய நாடுகள் சபை உறுதுணையாக நிற்கிறது - என்று காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று முன்தினம் மார்க் அண்ட்ரே பிராஞ்ச் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மாகாண சபைகள் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுங்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, செப். 01

அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுகிறது. மாகாண சபைகள் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதாயின் இலகுவாக அதை செய்ய முடியும். எனவே, விரைவில் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நேற்று நடந்த மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகவே நாம் ஒன்றிணைந்துள்ளோம். அதற்கு சகலரதும் ஒத்துழைப்பைப் பெற முயற்சிக்கின்றோம். மாறாக இது அனைவரையும் இணைத்துக் கொண்டு தேர்தலில் களமிறங்குவதற்கான பயணம் அல்ல.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட பின்னர் கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதி பணிப்பாளருக்கும் அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. இதே போன்று பல்வேறு துறைகளிலும் அரசாங்கம் அடக்குமுறைகளைப் பிரயோகித்துக் கொண்டிருக்கிறது.

இந்த அடக்குமுறைகளுக்கு அரசாங்கம் பொலிஸாரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதி ரணிலின் வழக்கு விசாரணை தினத்தன்று வீதிகள் மூடப்பட்டு பொது மக்கள் நீதிமன்றத்துக்கு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டது. இவ்வாறான அடக்குமுறைகளுக்கு எதிராக சட்ட ரீதியாக நாம் மக்களுக்காக முன்நிற்போம். நீதிமன்றத்தை முன்னிலைப்படுத்தி பொலிஸார் அடக்குமுறைகளை பிரயோகிக்க முற்பட்டால் அதனை எதிர்கொள்ள நாம் தயாராக உள்ளோம்.

மாகாண சபைகள் தேர்தலை நடத்துவது அரசாங்கத்துக்குள்ள பெரும் சவாலாகும். உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் அரசாங்கம் பல இலட்சம் வாக்குகளை இழந்துள்ளது. இந்த அச்சத்தில் மாகாணசபைத் தேர்தல் மேலும் காலம் தாழ்த்தப்படக் கூடும்.- என்றார். (ஐ)

## மாகாண...

திட்டம் என்ன? என்று தொலைக்காட்சி நேர்காணலில் அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பிரதமர்,

"தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் தேர்தலை நடத்துவதற்கு பின்வாங்கும் தரப்பு அல்ல. ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் இரு தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. எல்லை நிர்ணய அறிக்கை நிராகரிக்கப்பட்டதாலேயே மாகாண சபைகள் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. குறித்த அறிக்கையை மீளாய்வு செய்து பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குரிய செயல்பாடு ஆரம்பமாகியுள்ளது.

தேர்தல் திகதி பற்றி எம்மால் கூற முடியாது. அதனை தேர்தல் ஆணைக்குழுவே தீர்மானிக்கும். அதற்குரிய சூழ்நிலையை நாம் ஏற்படுத்திக் கொடுப்போம்." - என்றார். (ஐ)

## அரிதான...

நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பூமி சூரியனை சுற்றி வரும் பாதையிலும், சந்திரன் பூமியை சுற்றி வரும் பாதையிலும் சில நேரங்களில் சூரியன், பூமி மற்றும் சந்திரன் ஆகியவை ஒரே நேர்கோட்டில் வரும். அப்போது, சூரிய ஒளி பூமியில் விழுந்தாலும் சந்திரன்மீது விழாது. இதனால் சந்திர கிரகணம் ஏற்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 7ஆம் திகதி சந்திர கிரகணம் இரவு 8.58 மணிக்கு ஆரம்பமாகும். பகுதி கிரகணம் இரவு 9:57 மணிக்கு ஆரம்பமாகும். முழுமையான கிரகணம் - இரவு 11:01 மணிக்கும் அதிகபட்ச கிரகணம் - இரவு 11:42 மணிக்கும் கங்கண கிரகணம் முடிவு மறுநாள் நள்ளிரவு 12:22 மணிக்கும் பகுதி கிரக ணம் முடிவு பின்னிரவு 1.26 மணிக்கும் கிரகணம் முடிவு அதிகாலை 2.25 மணிக் கும் நிகழும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சர்வதேச விசாரணைக்கு...

குழப்பத்தை ஏற்படுத்துமே தவிர நீதியை பெற்றுக கொடுக்க வழிவகுக்காது என்று தெரி வித்த அவர், உள்ளக விசாரணை பொறி முறைக்குத் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பு, வழிகாட்டல்களை ஐக் கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச சமூகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளவதில் அரசாங்கம் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது - என்றும் கூறியுள்ளார்.

மேலும், நாட்டின் நீதிமன்ற கட்டமைப்புக்குள் விசாரணைகளை முன்னெடுக்க முடியும் என்பதை 2009, 2010 ஆண்டுகளில் நாங்கள் வலியுறுத்தி இருந்தோம். ஆனால், முன்னாள் பிரதம நீதியரசர் சிறியாணி பண்டாரநாயக்கவை ராஜபக்ஷர்கள் வெளியேற்றிய விதத்தின் பின்னர் உலகுக்கு எம்மால் எதையும் கூறமுடியாது போனது. ஆனால், எமது ஆட்சியில் சட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை வெளிப்படுத்தியுள்ளோம்.

2005 ஆம் ஆண்டில் தாரகி சிவராம் போன்ற ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். இவ்வகையான சம்பவங்களை மீள் விசாரணைக்கு எடுக்குமாறு கடந்த பெப்ரவரி மாதம் ஜனாதிபதி உத்தரவிட்டார். போரின் பின்னர் செய்த குற்றங்கள் குறித்தும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. நாம் ஆட்சிக்கு வரும் போது அரியாலை மனிதப் புதைகுழியில் 30 எலும்புக்கூடுகளே கண்டுப்பிடிக்கப்பட்டிருந்தன. ஆனால், தற்போது அந்த எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது. விசாரணைகளை முன்னெடுக்க அரசாங்கம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

அங்குள்ள பொலிஸாருக்கம் அரசாங்கமே ஊதியம் வழங்குகிறது. அரியாலை மாத்திரமல்ல, கொக்குத்தொடுவாய், மண்டைதீவு, மன்னார், கொழும்பு துறைமுகம் எனப் பல இடங்களில் மனிதப் புதைக்குழிகள் இருக்கின்றன. அவற்றை தோண்டும் பணிகளும் ஆரம்பிக்கப்படும். காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான பணிமனை மீள நடவடிக்கைளை ஆரம்பித்துள்ளது. எனவே அரசாங்கம் என்ற ரீதியில் இந்த விசாரணைகளை சுயாதீனமாக முன்னெடுக்க விரும்புகிறது.

இந்தப் புதைக்குழிகளின் உரிமையாளர்கள் ரணில் மற்றும் ராஜபக்ஷர்களே தவிர நாமல்லர். சிலர் வடக்கிலும் உள்ளனர். அரியாலை மனித புதைகுழியுடன் தொடர்புடையவர்கள் வடக்கில் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தெரிவாகியுள்ளனர். எனவே, சுயாதீனமான நீதிமன்ற கட்டமைப்பு நாட்டில் காணப்படும் போது சர்வதேச விசாரணைகள் தேவையில்லை. தற்போதைய சூழலில் சர்வதேச விசாரணைகள் அநாவசியமான குழப்பத்தை ஏற்படுத்துமே தவிர நீதியை பெற்றுக்கொடுக்காது - என்று கொழும்பு வார இதழ் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

-கிடைக்கும் நன்மைகளின் அடிப்படையில்-

# ஆய்வு கப்பல்கள் இலங்கை கடலில் நுழைவதற்கு அனுமதியளிக்கப்படும்

கொழும்பு செப். 01

**நாட்டுக்குக் கிடைக்கும் நன்மைகளின் அடிப்படையில் உலக நாடுகளின் ஆய்வுக் கப்பல்கள் இலங்கை கடற்பரப்புக்குள் நுழைய இனி அனுமதியளிக்கப்படும் என்று தெரிவித்த துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அத்துடன், இந்தியாவா, சீனாவா அல்லது அமெரிக்காவா என்பது எமக்கு முக்கியமில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், உலக நாடுகளின் ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வருவது குறித்துத் தீர்மானிக்க வெளிவிவகார அமைச்சு விசேட குழு அமைத்து கலந்துரையாடி வருகிறது. இவ்வாறான ஆய்வுக் கப்பல்களின் வருகை குறித்து ஏனைய நாடுகள் முன்னெடுக்கும் பொறிமுறைகள் தொடர்பாகவும் ஆராய்ந்து பொதுவான திட்டத்தை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சீனா மாத்திரமல்ல வேறு எந்தவொரு நாட்டின் ஆய்வுக் கப்பல்கள் இலங்கை வருவதாயின், நாட்டிற்கு கிடைக்கும் நன்மைகள் என்ன என்பதை முதலில் கவனத்தில் கொள்ளப்படும். மறுபுறம் இவ்வாறான ஆய்வுக்கப்பல்கள் வரும் போது உலகத்துக்குக் கிடைக்கும் நன்மைகள் என்ன என்பதனையும் ஆராய வேண்டும். ஏனெனில், வல்லரசு நாடுகளுக்கு இடையில் போர் சூழலும் போட்டித் தன்மையும் காணப்படுகின்றமை இரகசியமான விடயமல்ல.

எனவே ஏவுகணை தாக்குதல்கள், புவிசார் அரசியல் நலன்கள், ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் கலாசார பயணங்கள் என பல கோணங்களில் ஆய்வுக்கப்பல்களின் வருகையை கவனத்தில் கொள்ள வேண்டியதுள்ளது - என்றார். (ஐ)

## கைதான பாதாள குழு தலைவர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்!




கொழும்பு, செப். 01

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட பாதாள உலகக் குழுவின் முக்கியஸ்தர்கள் ஐவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களில் கெஹல் பத்தர பத்மே, கொமாண்டோ சலிந்த, பாணந்துறை நிலங்க ஆகியோர் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பெக்கோ சமன் மற்றும் தெம்பிலி லஹிரு ஆகியோர் மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களின் பின்னணியில் செயல்பட்டனர் என்று கூறப்படும் இவர்கள் ஐவரும் கடந்த வியாழக்கிழமை இந்தேனேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வென்னப்புவ துப்பாக்கிச்சூடு சந்தேகநபர் ஒருவர் கைது!

சிலாபம், செப். 01

புத்தளம் - வென்னப்புவவில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், இந்தச் சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் வாள் ஒன்றும் வான் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் நிலையத்துக்கு சென்று கையொப்பமிட்டுவிட்டு திரும்பிய நபர் ஒருவர் வென்னப்புவவில் சுட்டுக் கொல்லப்பட்டார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 5இல்)

## நளிந்த தலைமையிலான குழு ஓம் பிர்லாவை சந்தித்தது!



கொழும்பு, செப். 01

இந்தியா சென்றுள்ள நளிந்த ஜெயதிஸ்ஸ தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இந்திய மக்களவை தலைவர் சிறீ ஓம் பிர்லாவை பாராளுமன்ற சபாநாயகர் பணிமனையில் சந்தித்து கலந்துரையாடினர்.

இதுபோன்ற வருகைகள் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை குறிப்பாக பாராளுமன்ற ஒத்துழைப்பு சுகாதாரம், ஊடகம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் மேலும் வலுப்படுத்தும் என்று ஓம் பிர்லா தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்தின் அழைப்பின் பேரில் எம். பிக்கள் குழு இந்தியா சென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது . (ஐ)

## ஐ. நா. மனித உரிமை ஆணையரின் கருத்துக்கு சட்ட மா அதிபர் அதிருப்தி!

கொழும்பு, செப். 01

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் சட்டமா அதிபர் திணைக்களம் தொடர்பில் வெளியிட்ட கருத்துகளுக்கு சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்காக வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிரெஞ்சுடனான சந்திப்பின் போதே அவர் தமது அதிருப்தியை வெளியிட்டார் என்று கூறப்படுகிறது.

அத்துடன், சட்டமா அதிபர் திணைக்களம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கருத்து தொடர்பில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரில் முன்வைக்கப்பட வேண்டிய பதில் வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் அறிக்கைக்கு பதிலளிக்கும் இலங்கை அரசின் முழு அறிக்கையின் ஒரு பகுதியாக சட்டமா அதிபரின் பதில் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாத ஆரம்பத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர், சட்டமா அதிபர் திணைக்களம் நீதிக்கு ஒரு தடையாக இருக்கிறது.

கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்கு தொடுநர் பணிமனையை உறுதி செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நீதிமன்ற ஆணைக்கு அமைவாக ஆவணத்தை வழங்காத கடற்படை

கொழும்பு, செப். 32

இறுதிப் போர் காலகட்டத்தில் காணாமலாக்கப்பட்டோரில் சிலரை தடுத்து வைத்திருந்த கடற் படை அதிகாரிகள் குழுவுடன் தொடர்புடைய ஆவணத்தை வழங்குமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்குக் கீழ்படிவதற்கு கடற் படை தவறியுள்ளமை நீதிமன்றத் தின் முன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலையின் பிரபல 'கன்சைட்' நிலக்கீழ் வதைமுகாமை கண்காணித்த பின்னர் அங்கு செயல்படும் விசேட புலனாய்வு பிரிவு என்ற குழுவை கலைக்குமாறு கோரி அன்றைய கடற்படை புலனாய்வுப் பிரிவு பணிப்பாளராக பணியாற்றிய நிஷாந்த உலுகேதென்னவால் கடற்படைத் தளபதிக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் கடிதத்தின் பிரதியை கடற்படை தமக்கு வழங்கவில்லை என்று குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

காணாமலாக்கப்பட்ட ஒருவர் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் கடற்படை தளபதி உள்ளிட்ட கடற்படை அதிகாரிகள் ஐவருக்கும் பொலிஸ் அதிகாரிகள் 6 பேருக்கும் எதிரான வழக்கின் விசாரணையின் போது பொல்கஹவெல நீதிவான் பிரசாந்த பெர்னான்டோ அந்தக் கடிதத்தின் பிரதியை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்குமாறு இரண்டாவது தடவையாகவும் கடற்படைக்கு உத்தரவு பிறப்பித்தார்.

நபரொருவரை காணாமலாக்கியமை தொடர்பான விசாரணைக்கு அமைவாக இரகசிய பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் தமித் நிஷாந்த சிரிசோம உலுகேதென்ன மீண்டும் ஒகஸ்ட் 27ஆம் திகதி நீதிமன்றத்தின் முன்னிலைப் படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்துக்கு இந்த விடயத்தை தெரிவித்தது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்னாள் கடற்படைத் தளபதிக்கு எதிராக சாட்சியங்களை முன்வைக்கத் தவறியமையால் அவரை இந்த வழக்கிலிருந்து விடுவிக்குமாறு அட்மிரல் உலுகேதென்ன சார்பாக நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணி மகேஷ் கிரிஷாந்த நீதிவானிடம் கோரிக்கை விடுத்தார். இதனை, பாதிக்கப்பட்டவர்கள் சார்பான சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன அதற்கு ஆட்சேபனை தெரிவித்தார்.

விசாரணைகள் நடைபெறுவதால் சந்தேகநபரை விடுவிப்பது செய்வது பொருத்தமற்றது என சட்டத்தரணி மேலும் தெரிவித்தார்.

கேகாலையைச் சேர்ந்த சாந்த சமரவீர என்பவரை கடத்திக் கொண்டுபோய் திருகோணமலை "கன்சைட்" கடற்படை வதைமுகாமில் தடுத்து வைத்து காணாமலாக்கியமை தொடர்பான குற்றச்சாட்டுகளுக்காக கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் கடற்படை தளபதி நிஷாந்த உலுகேதென்னவை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொல்கஹவெல நீதிவான் பிரசாந்த பெர்னாண்டோ உத்தரவு பிறப்பித்தார். (ஐ)

## ஐ. தே. கவின் மாநாட்டில் பங்கேற்கின்றார் சஜித்?

கொழும்பு, செப். 01

ஐக்கிய தேசிய கட்சியின் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த மாநாடு எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த நிலையில், ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து பிரிந்து சென்று ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த உறுப்பினர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படும் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக, குறித்த மாநாட்டை பொதுவான ஒரு இடத்துக்கு மாற்றுவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

2020ஆம் ஆண்டு ஏற்பட்ட பிளவுக்குப் பின்னர் சஜித் பிரேமதாசவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான உறவு வலுவடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம், குறித்த மாநாட்டில் பங்கேற்குமாறு முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா குமாரதுங்க ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் பங்குபற்றுவதற்கான அழைப்பு கிடைத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org